IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 05/2021 |
| | | D/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Sankar | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **12-12-2022**

## CHIEF EXAMINATION :

நான் இவ்வழக்கில் பிரதிவாதி ஆவேன். மேலும், இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் 1வது சாட்சி ஆவேன். மேற்படி வழக்கில் எனது தரப்பில் பிரமான வாக்கு மூலம் தாக்கல் செய்கிறேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமான வாக்கு மூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் யாவும் உண்மை என்றும், அதில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றும் உளமாற உறுதி அளிக்கிறேன். என்னால் அளிக்கக்கூடிய சாட்சியம் மற்றும் ஆவணங்கள் உண்மையானவை என உறுதியளிக்கிறேன்.

முதல் விசாரணை (பி.வா.சா.1 ஆஜர்.) சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | குறியீட்டு எண் |
|---|---|---|---|
| 1 | 01.09.2022 | எனது தகப்பனார் கருப்பண மூப்பன் மற்றும் எனது சித்தப்பா முத்தையா மூப்பன் மேலும் என்னுடைய பெயரில் உள்ள பட்டா எண்.643க்குண்டான கணினி இணையதள பட்டா ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | பி.வா.சா.ஆ.1 |
| 2 | 12.07.2022 | 1386ம் பசலிக்கு சர்வே எண்.716/6, 717/5 மற்றும் 717/6 ஆகிய சொத்துக்களுக்கு என்னுடைய தகப்பனாரான கருப்பணமூப்பன் பெயரில் வாடிப்பட்டி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள அடங்கல் ஆவணத்தின் சான்றிட்ட ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | பி.வா.சா.ஆ.2 |
| 3 | 10.02.2016 | பட்டா எண்.1465க்குண்டான எனது பெயரில் உள்ள கிஸ்து ரசீதை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு | பி.வா.சா.ஆ.3 |

| | | | |
|---|---|---|---|
| | | செய்திட கேட்டுக்கொள்கிறேன். | |
| 4 | 21.06.2022 | பட்டா எண்.643 எனது தகப்பனார் கருப்பண்மூப்பன் வகையறா பெயரில் உள்ள கிஸ்து ரசீதை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | பி.வா.சா.ஆ.4 |
| 5 | 29.04.2019 | அசல் வழக்கு எண்.53/14 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரையின் சான்றிட்ட ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | பி.வா.சா.ஆ.5 |
| 6 | - | தாவா சொத்தில் என்னால் மின் கட்டணம் செலுத்தப்பட்டதற்கான எனது பெயரில் உள்ள மின் கட்டண அட்டை மற்றும் ரசீதை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | பி.வா.சா.ஆ.6 |

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

(**மேற்கண்ட பி.வா.சா.ஆ.1 முதல் 6 ஆவணங்கள் வழக்கு சொத்துக்களுக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அல்ல என்றும், வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும் வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் ஆட்சேபணை செய்யப்பட்டு, ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்திட கேட்டுக்கொள்ளப்பட்டு அனுமதிக்கப்பட்டு, ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்திட அனுமதிக்கப்படுகிறது.**)

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி